


# பெண்கள் மற்றும் ஹெச்ஐவி

ஹெச்ஐவி உள்ள பெண்களை எந்த அறிகுறிகள் பாதிக்கும்?
ஹெச்ஐவி உள்ள ஆண்களுக்கு ஏற்படும் பெரும்பாலான அறிகுறிகள் ஹெச்ஐவி உள்ள பெண்களுக்கும் ஏற்படும். இத்துடன் கூட, ஹெச்ஐவி/எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் பெண்களை மட்டுமே பாதிக்கும். மாதவிலக்கு பிரச்சினைகள், பிறப்புறுப்பு நோய்கள் மற்றும் ஸெர்விக்ஸ்-ல் (கருப்பையின் நுனி) அசாதரணமான வளர்ச்சி போன்ற அடிக்கடி ஏற்படும் ஸெர்விக்ஸ் நோய்கள் மற்றும் ஸெர்விக்ஸில் புற்றுநோய் உட்பட பல விஷயங்கள்.

ஹெச்ஐவி மருந்துகளின் பாதிப்புகளும், ஆண்களிலிருந்து, பெண்களுக்கு மாறுபடும். இத்துடன் ஹெச்ஐவி உள்ள பெண்களுக்கு கர்ப்பம் மற்றும் குழந்தை பராமரிப்பு போன்ற தனிப்பட்ட கவலைகளும் உள்ளன.

மாதவிலக்கு பிரச்சினைகள்

- ஹெச்ஐவி உள்ள பெண்கள் தங்கள் மாதவிலக்கில் பல மாற்றங்களை சந்திக்கலாம். சீராக இல்லாத மாதவிலக்கு காலவட்டங்கள், அதிக அல்லது குறைவான இரத்தப் போக்கு அல்லது மாதவிலக்கு நின்றுவிடலாம்.
- இத்துடன் கூட ஹெச்ஐவி உள்ள பெண்கள் பிஎம்எஸ்-ன் (மாதவிலக்கிற்கு முந்தைய அறிகுறிகள் - ப்ரீமென்ஸ்ட்ருஅல் சின்ட்ரோம்) தீவிர அறிகுறிகளை அனுபவிக்கலாம்.

இந்த மாற்றங்களுக்கு ஹெச்ஐவியுடன் நேரடி தொடர்பு இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். நெடுங்கால அழுத்தம், தீவிரமான எடை குறைவு, நெடுங்கால போதை பொருள் உபயோகம், கர்ப்பம், மற்ற தீவிர நோய்கள், அல்லது சில மருந்துகளின் தொடர்ச்சியான உபயோகம் ஆகியவை காரணமாகவும் மாதவிலக்கில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்த பிரச்சினைகள் இருந்தால் உங்கள் குடும்ப டாக்டரோ அல்லது பெண்களுக்கான மருத்துவரோ (பெண்களின் கருத்தரிப்பு ஆரோக்கியத்தில் நிபுணர்) உங்களை பரிசோதிக்க வேண்டும்.

பிறப்புறுப்பு (வஜைநல்) தொற்று நோய்கள்
பிறப்புறுப்பு நோய்கள், குறிப்பாக ஈஸ்ட் கிருமிகளால் ஏற்படக்கூடிய நோய் ஹெச்ஐவி உள்ள பெண்களுக்கு ஏற்படுவது சகஜம். நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமாக இருப்பதால், இந்த கிருமிகள் மறுபடியும் மறுபடியும் தாக்குகிறது. அதனால் பொதுவான சிகிச்சையைவிட தீவிரமான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

ஸெர்வைகல் டிஸ்ப்ளேசியா
ஸெர்விக்ஸின் செல்களில் அசாதாரணமான வளர்ச்சியோ மாற்றமோ தோன்றுவது ஸெர்வைகல் டிஸ்ப்ளேசியா. இது ஹெச்ஐவி இல்லாத பெண்களைவிட ஹெச்ஐவி உள்ள பெண்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. இந்த புற்று நோய்க்கு முந்தைய நிலை, சிகிச்சை



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca
CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

அளிக்கப்படாவிட்டால் ஸெர்வைகல் புற்று நோயாக மாறலாம். அதிர்ஷ்டவசமாக, ஸெர்வைகல் டிஸ்ப்ளேசியாவும், ஸெர்வைகல் புற்று நோயும் தடுக்கக்கூடியவை. இந்த நோய்களை தடுக்க முறையாக பாப் ஸ்மியர் சோதனைகள் செய்து கொண்டால், இதற்கான சிகிச்சையை விரைவாக தொடங்கலாம்.

ஹெச்ஐவி மருந்துகளின் பாதிப்புகள்

ஹெச்ஐவி-யை எதிர்க்கும் பலவித மருந்துகளை பயனுள்ள வகையில் சேர்ந்து எடுத்துக் கொள்வதால் உடலில் உள்ள வைரஸ்-ன் (உங்கள் வைரல் லோட்) அளவை குறைக்க உதவும், உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, நோயை எதிர்க்கும் உடலின் திறனையும் வலுப்படுத்தும். மாதவிலக்கு பிரச்சினைகள், அடிக்கடி ஏற்படும் பிறப்புறுப்பு நோய்கள் மற்றும் செர்விக்கல் டிஸ்ப்ளேஸியா உட்பட்ட ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதையும் இதற்கான அறிகுறிகள் தோன்றும் அபாயத்தையும் பெரும்பாலும் இதனால் குறையலாம்.

மற்றொருபுறம், சில ஹெச்ஐவி மருந்துகளின் பக்கவிளைவுகள் ஆண்களை போல் அல்லாது பெண்களுக்கு வித்தியாசமாக இருக்கும்,  மருந்தின் அளவுகளும் வேறுபடும். ப்ரோடீஸ் இன்ஹிபிட்டர்ஸ் எடுத்துக் கொள்ளும் சில பெண்களின் உடல் வடிவில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, குறிப்பாக மார்பகங்கள் பெரிதாகின்றன, மற்றும் இடுப்பு அளவும் கூடுகிறது. இத்துடன் கூட சில ஹெச்ஐவிக்கான மருந்துகள் கருத்தடை மாத்திரைகளின் பலனையும் பாதிக்கிறது. கருத்தடை மாத்திரைகள், ஊக்க மாத்திரைகள் மற்றும் மூலிகை மருந்துகள் உட்பட டாக்டரின் சீட்டுப்படியும், சீட்டு இல்லாமலும் நீங்கள் எடுத்துக் கொள்ளும் மாத்திரைகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் கலந்து பேசுங்கள்.

கர்ப்பம் குறித்த கவலைகள்

ஹெச்ஐவி இருந்தால் நீங்கள் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று இல்லை. உங்கள் குழந்தைக்கு நிச்சயமாக ஹெச்ஐவி இருக்கும் என்றும் கூற முடியாது. உங்கள் குழந்தைக்கு ஹெச்ஐவி வைரஸ் வராமல் தடுக்கும்,  அபாயத்தைக் குறைக்க பிரசவத்தின் போதும் அதற்கு பின்பும் எடுத்துக் கொள்ள பல சிகிச்சைகள் உள்ளன. உங்கள் கவலைகளை டாக்டரிடமோ, செவிலித்தாயிடமோ நிச்சயமாக கலந்து பேசுங்கள்.

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.


CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.



This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem